## செராஸ் பாருவில் செயல்பட்டு வந்த

# கோழி அறுப்பு மையம் மூடப்பட்டது



கோழி அறுப்பு மையம் சட்டவிரோதமான முறையில் செயல்பட்டு வந்த வேளையில், அங்கு வேலை செய்யும் அந்நிய நாட்டுத் தொழிலாளர்கள் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளாமல் இருந்து வந்துள்ளதோடு, அவர்கள்

கோலாலம்பூர், மார்ச் 3-
கம்போங் செராஸ் பாரு அருகில் சட்டவிரோதமான முறையில் செயல்பட்டு வந்த கோழி அறுப்பு மையத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று இழுத்து மூடியது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் லைசென்ஸ் பிரிவு உட்பட அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் நேற்று பின்னிரவு 3 மணியளவில் அந்த கோழி அறுப்பு மையத்தை சோதனையிட்டபோது, அது மிகவும் அசுத்தமான நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து அது மூடப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

சுமார் 21 அதிகாரிகள் அங்கு சோதனையிட்டபோது, அறுக்கப்பட்ட கோழிகள் அனைத்தும் மிகவும் அசுத்தம் நிறைந்த தரையில் வைத்து சுத்தம் செய்யப்படுவதும் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அது கூறியது.

அதேவேளையில், கோழிகளைச் சுத்தம் செய்த பின்னர் அதன் ரத்தம், எலும்பு, இறகு ஆகியவை அருகிலுள்ள பொதுக் கால்வாயில் விடப்பட்டதாகவும் தெரிய வந்தது. மேலும் அந்த கோழி அறுப்பு மையத்தில் நீரை சுத்தப்படுத்தும் கருவிகள் ஏதும் இல்லாத நிலையில், கோழிகளை சுத்தப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நீரும் அடிக்கடி மாற்றப்படுவதில்லை எனவும் தெரிய வந்தது.

இதனைத் தவிர்த்து, அந்த உணவுகளைக் கையாள்வது மீதான பயிற்சிகளையும் மேற்கொண்டிருக்கவில்லை எனவும் தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து உணவுப் பாதுகாப்பு லைசென்ஸ் சட்டத்தின் 28(1) பிரிவின் கீழ் அதனை உடனடியாக மூடுமாறு கோலாலம்பூர் மாநகர் மன்றம் நோட்டீஸ் வழங்கியது.

1974ஆம் ஆண்டு கால்வாய், கட்டட சட்டத்தின் 47(1)(டி) பிரிவின் கீழ் 3 சம்மன்களும் 23(3)(பி) பிரிவின் கீழ் இரண்டு சம்மன்களும் 2016ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு லைசென்ஸ் பிரிவின் 33(3) பிரிவின் கீழ் மூன்று சம்மன்களும் சார்வு செய்யப் பட்டதாகவும் மாநகர் மன்றம் கூறியது.